දුරකථන
தொலைபேசி
Telephones
011-2136600
011-2136650

ලේකම්
செயலாளர்
Secretary
011-2136602

ෆැක්ස්
தொலைநகல்
Fax
011-2876169
011-2876181

විද්‍යුත් තැපැල
மின் - அஞ்சல்
E - mail
info@psc.gov.lk

වෙබ් අඩවිය
இணையத்தளம்
Website
www.psc.gov.lk

# රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය
## அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்
## OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION

අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල
இல. 1200/9, இரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை
**No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla**

මගේ අංකය
எனது இல.
My No.
PSC/EST/02-03/05/202

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date
2024.06. 6

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

<u>வருடாந்த இடமாற்ற நடைமுறைகளைத் தயாரித்தல்</u>

2310/29 ஆம் இலக்க மற்றும் 2022.12.14 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளின் I ஆவது தொகுதியின் XVIII ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் தொடர்பிலான ஏற்பாடுகள் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. வருடாந்த இடமாற்ற மீளாய்வுக் குழுவிடம் மேன்முறையீடுகளை சமர்ப்பிக்கையில், குறித்த குழு கவனம் செலுத்தும் விடயங்களுக்கு அமைய மேன்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றத்தை மாற்றம் செய்ய/திருத்தம் செய்ய/இரத்துச் செய்ய முடியும் என வருடாந்த இடமாற்ற நடைமுறையில் குறிப்பொன்றை இட்டு உள்ளடக்குதல் வேண்டும்.

03. வருடாந்த இடமாற்றக் கட்டளைக்கு எதிராக முன்வைக்கப்படும் மேன்முறையீட்டைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்கையில் குறித்த இடமாற்ற சுழற்சிக்கு ஏற்புடைய ஏனைய உத்தியோகத்தர்களுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதால் மேன்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தை அவ்வாறே நடைமுறைப்படுத்துமாறும், மேன்முறையீட்டாளருக்கு அடுத்த வருடம் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்குமாறும் அறிவிக்கும் சந்தர்ப்பத்தில் குறித்த மேன்முறையீட்டாளர் மீண்டும் அடுத்த வருடம் இடமாற்றத்திற்கு விண்ணப்பித்தால், குறித்த சேவை நிலையத்தில் சேவைக் காலம் ஒரு வருட காலமாக மாத்திரம் இருப்பினும் அச் சந்தர்ப்பத்திற்கு மாத்திரம் ஆகக் குறைந்த சேவைக் காலத்தைக் கவனத்திற் கொள்ளாது நடவடிக்கை எடுப்பதற்கு இடமளிக்கப்படும் என, பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நியமிப்புச் செய்யும் தத்துவங்கள் கையளிக்கப்பட்ட அதிகாரிகளினால் ஏற்புடைய இடமாற்ற நடைமுறைகளில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

04. வருடாந்த இடமாற்ற முறையின் கீழ் இடமாற்றத்திற்கு விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு நிலவும் வெற்றிடங்கள் குறித்த அறிவித்தல் இல்லை என்பதால் இடமாற்ற சுற்றறிக்கைகளை வெளியிடுகையில் சேவை நிலையமொனறில் ஆகக் கூடிய சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்வதன் மீது இடமாற்றம் செய்யப்படும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் நிறுவனங்களைப் பகிரங்கப்படுத்தல் வேண்டும்.

05. வருடாந்த இடமாற்ற மேன்முறையீடுகளைப் பகிரங்க சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்துத் தீர்மானமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கும் போதிய கால அவகாசமொன்றை வழங்கக் கூடியவாறு வருடாந்த இடமாற்ற செயல்முறையை ஒவ்வொரு வருடமும் மார்ச் 01 ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்குமாறும் அதற்கமைய இவ் வருடத்தின் இடமாற்ற செயல்முறையைத் துரிதமாக ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தயவுடன் அறியத் தருகிறேன்.

பகிரங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

டப்ளியூ.எச்.எம்.எம்.சீ.கே.தயாரத்ன
செயலாளர்
பகிரங்க சேவை ஆணைக்குழு